# திருவண்ணாமலை நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023 – 2024

# திருவண்ணாமலை நகராட்சி

## நிர்வாக அறிக்கை – 2023 - 2024

### 1. அமைப்பும், நிர்வாகமும்

அரசாணை எண்.57 நாள் 31.01.1896ன்படி 01.04.1896ல் திருவண்ணாமலை நகராட்சி அமையப் பெற்றது. இந்நகராட்சி 10.04.1959 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் 29.04.1974 ம் தேதிய 1133 எண் உள்ள அரசாணையின்படி 01.05.1974 முதல் முதல்நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வந்தது. பின்னர் அரசாணை எண்.85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.05.1998ன்படி தேர்வு நிலை நகராட்சியாகவும்,, அரசாணை ஆணை எண். 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.12.2008ன்படி சிறப்பு நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை நகராட்சியின் மக்கள் தொகை 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1,45,278 ஆகும். இதில் ஆண். 72406 பெண்.72872 ஆகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 13.64 சதுர கிலோ மீட்டர் ஆகும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 189 எண்ணுள்ள 20.08.1996ம் தேதி அரசாணையின்படி 39 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாகம்

### அ. நகர்மன்றம்

22.03.2022 அன்று முதல் திருமதி.வே.நிர்மலா வேல்மாறன் அவர்கள் நகரமன்றத் தலைவராக பதவி வகிக்கிறார்.

22.03.2022 அன்று முதல் திரு. ராஜாங்கம் அவர்கள் நகரமன்றத் துணைத் தலைவராக பதவி வகிக்கிறார்.

### ஆ. அங்கீகரிக்கப்பட்ட தேர்தல் வார்டுகள் விவரம்

| வ. எண் | ஒதுக்கீடு | வார்டுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்டவர்கள் (பொது) | 3,19 | 2 |
| 2. | தாழ்த்தப்பட்டவர்கள் (பெண்) | 9,22,36 | 3 |
| 3. | பெண்கள் (பொது) | 2,4,8,12,13,15,17,18,23,24,25,27,29,31,33,35,38 | 17 |
| 4. | பொது | 1,5,6,7,10,11,14,16,20,21,26,28,30,32,34,37,39 | 17 |
| | | **மொத்தம்** | **39** |

### இ. நகர்மன்ற உறுப்பினர்கள் விவரம்

| வ. எண் | வார்டு எண் | நகர்மன்ற உறுப்பினர் பெயர் | முகவரி |
|---|---|---|---|
| 1 | 1 | திரு.அ.கோவிந்தன்,த/பெ. அண்ணாமலை | நெ.22/பி, போளூர் ரோடு-7 வது தெரு, திருவண்ணாமலை |
| 2 | 2 | திருமதி.செ.ஆண்டாள்,க/பெ. செல்வராஜி | நெ.66, டாக்டர் அம்பேத்கார் தெரு திருவண்ணாமலை |
| 3 | 3 | திரு.இர.சீனுவாசன், க/பெ. இரத்தினம் (07.09.2023 – ல் இறப்பு) | நெ.61/8,பல்லவன்நகர் திருவண்ணாமலை |
| 4 | 4 | திருமதி.மு.ராணி, க/பெ. முருகன் | நெ.71/8/204ஏ, முத்துவிநாயகர் கோவில் தெரு, திருவண்ணாமலை |
| 5 | 5 | திரு.ப.சீனுவாசன், த/பெ. பலராமன் | நெ.65/24, புதுவாணியங்குளம்-1 |

| | | | |
|---|---|---|---|
| | | | திருவண்ணாமலை |
| 6 | 6 | திரு.ச.நரேஷ், த/பெ.சங்கர் | நெ.11/14சி, புதுவாணியங்குளம் தெரு-10 திருவண்ணாமலை |
| 7 | 7 | திரு.ம.செந்தில், த/பெ. மணி | நெ.82/26பி,ஜொனக்கரைபாறை தெரு திருவண்ணாமலை |
| 8 | 8 | திருமதி.ராஜாத்தி, க/பெ. விஜயராஜ் | நெ.40ஏ, வர்த்தகர் தெரு(செட்டி தெரு) திருவண்ணாமலை |
| 9 | 9 | திருமதி.கே.உதயா, க/பெ.ரவி | நெ.10/13, தியாகி அண்ணாமலை நகர் திருவண்ணாமலை |
| 10 | 10 | திரு.ச.கணேசன், த/பெ. சண்முகம் | நெ.29, வேடியப்பன் கோவில் தெரு திருவண்ணாமலை |
| 11 | 11 | திரு.சு.ராஜாங்கம், த/பெ. சுந்தரமூர்த்தி | நெ.15/7/1, ஆறுமுகனார் நகர் திருவண்ணாமலை |
| 12 | 12 | திருமதி.சீ.பிரியா, க/பெ. சீனுவாசன் | நெ.24/53, கட்டபொம்மன் தெரு திருவண்ணாமலை |
| 13 | 13 | திருமதி.அ.சுமதி, க/பெ. அருண்குமார் | நெ.50, ஆவாரங்காட்டு தெரு திருவண்ணாமலை |
| 14 | 14 | திரு.கே.சுப்பிரமணி, த/பெ. கேசவன் | நெ.17/5ஏ, தென் ஒத்தவாடைத் தெரு திருவண்ணாமலை |
| 15 | 15 | திருமதி.ர.அருணா, க/பெ. ரவி | நெ.272/56,திருவூடல்தெரு திருவண்ணாமலை |
| 16 | 16 | திரு.பீ.சந்திரபிரகாஷ், த/பெ. பீமராஜ் | நெ-47/21, வட அய்யங்குள அக்ரஹரம் திருவண்ணாமலை |
| 17 | 17 | திருமதி.பு.இந்து, க/பெ. புகழேந்தி | நெ.12ஏ, இரமலிங்கனார் -3வது தெரு திருவண்ணாமலை |
| 18 | 18 | திருமதி.கி.காயத்ரி, க/பெ. கிருஷ்ணகுமார் | நெ.16/1, வேடியப்பன் கோவில் முதல் தெரு, திருவண்ணாமலை |
| 19 | 19 | திரு.பெ.ரா.நாகராஜ், த/பெ. ராஜரத்தினம் | நெ.15/297,கீழ்நாத்தூர் திருவண்ணாமலை |
| 20 | 20 | திருமதி.கு.அல்லி, க/பெ. குணசேகரன் | நெ.644/ஏ,காமராஜ்நகர் திருவண்ணாமலை |
| 21 | 21 | திரு,.ஆ.பிரகாஷ், த/பெ. ஆறுமுகம் | நெ.62/48பி,அஜிஸ்காலனி திருவண்ணாமலை |
| 22 | 22 | திருமதி.க.பானுக/பெ.கருணாமூர்த்தி | நெ.32,சமுத்திரம்காலணிதிருவண்ணாமலை |
| 23 | 23 | திருமதி.ரா.திலகம், க/பெ. ராஜாமணி | நெ.48/133,அரசமரத்தெரு திருவண்ணாமலை |
| 24 | 24 | திருமதி.ச.சாந்தி, க/பெ.சரவணன் | நெ..2, வ.ஊ.சி.நகர்-8வது தெரு திருவண்ணாமலை |
| 25 | 25 | திருமதி.ப.ஸ்ரீதேவி, க/பெ. பழனி | நெ.30,ஏரிக்கரைதெரு |

| | | | |
|---|---|---|---|
| | | | சமுத்திரம், திருவண்ணாமலை |
| 26 | 26 | திரு.க.பிரகாஷ், த/பெ. கண்ணன் | நெ.335/63பி,ரமணாநகர்<br>செங்கம் ரோடு, திருவண்ணாமலை |
| 27 | 27 | திருமதி.மு.கீதா, க/பெ. முருகன் | நெ.369, முருகர் கோவில் தெரு<br>திருவண்ணாமலை |
| 28 | 28 | திரு.க.கோபிசங்கர், த/பெ. கனகராஜ் | நெ.386/647, எல்ஐஜி, தாமரைநகர்<br>திருவண்ணாமலை |
| 29 | 29 | திருமதி.சு.கலைவாணி, க/பெ. சுரேஷ் | நெ.14, செங்கம் ரோடு-2வது தெரு<br>திருவண்ணாமலை |
| 30 | 30 | திரு.ர.அப்பாஸ், த/பெ. ரஷீத்சாயபு | நெ.33எ,பட்டேல் அப்துல் ரசாக் தெரு<br>திருவண்ணாமலை |
| 31 | 31 | செல்வி.ம.பெனாசீர், த/பெ. மகபூப் ஷெரிப் | நெ.83,எள்ளுக்குட்டைதெரு<br>திருவண்ணாமலை |
| 32 | 32 | திரு.மு.பழனி, த/பெ. முருகேசன் | நெ.511, முருகர் கோவில் தெரு<br>தேனிமலை, திருவண்ணாமலை |
| 33 | 33 | திருமதி.ஜா.ஷாகிரா, க/பெ. ஜாகீர்உசேன் | நெ.170/87. அண்ணாநகர் 9வது தெரு<br>திருவண்ணாமலை |
| 34 | 34 | திரு.ர.ஜோதி, த/பெ.ரங்கநாதன் | நெ.36/25,மாரியம்மன் கோவில்தெரு-9<br>திருவண்ணாமலை |
| 35 | 35 | திருமதி.சி.பாப்பாத்தி, க/பெ. சின்னதம்பி | நெ.25/6, மாரியம்மன் கோயில் தெரு<br>திருவண்ணாமலை |
| 36 | 36 | திருமதி.மூ.ஜெயமணி, க/பெ. மூர்த்தி | நெ.109/38,கல்நகர்<br>திருவண்ணாமலை |
| 37 | 37 | திருமதி.மு.ஜமிலாபிவீ,க/பெ. முகம்மதுசேட் | நெ.79/48, முகல்புறா தெரு,திருவண்ணாமலை |
| 38 | 38 | திருமதி.ச.ஹேமா, க/பெ. சசிகுமார் | நெ.2,புதுமேட்டுதெரு<br>திருவண்ணாமலை |
| 39 | 39 | திருமதி.வே.நிர்மலா , க/பெ. வேல்மாறன் | நெ.23ஜி,பாரதிநகர்<br>திருக்கோவிலூர்சாலை, திருவண்ணாமலை |

## 2. மன்ற கூட்டங்கள்

அறிக்கை ஆண்டில் 5 சாதாரண கூட்டங்கள் நடைபெற்றது. மேலும் அவசர கூட்டம் 1 நடைபெற்றது.

**அ. கூட்ட நடவடிக்கைகளும், அங்கத்தினர்கள் வருகையும் :-**

அறிக்கையாண்டில் 7 கூட்டங்கள் நடைபெற்றன. அதில் மொத்தம் 388 பொருட்கள் பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட்டன. கூட்டங்களில் எடுத்துக் கொண்ட பொருட்கள் ஏதும் ஒத்தி வைக்கப்படவில்லை. இவ்வறிக்கை ஆண்டில் 1 நியமன குழு கூட்டம் நடைபெற்றது.

## 3. மேலாண்மை

அறிக்கையாண்டில் மேலாண்மை செலவு ரூ.553003695/- (அனைத்து நிதிகள்) இது சென்ற ஆண்டு ரூ.480233616/- ஆக இருந்தது.

## 4. அறிக்கையாண்டில் பணிபுரிந்த அலுவலர்கள்

| வ. எண் | பெயர் திரு / திருமதி | பதவி | பிரிவு | முதல் | வரை |
|---|---|---|---|---|---|
| 1 | ரா. முருகேசன் | ஆணையாளர் | | 01.04.2023 | 30.04.2023 |
| | எம். நீலேஷ்வர் | பொறியாளர் | | 01.05.2023 | 03.05.2023 |
| | ந. தட்சணாமூர்த்தி | ஆணையாளர் | | 03.05.2023 | 19.01.2024 |
| | மு.ரா. வசந்தி | ஆணையாளர் | | 19.01.2024 | 14.03.2024முப |
| | ந. தட்சணாமூர்த்தி | ஆணையாளர் | | 14.03.2024பிப | 31.03.2024 |
| 2 | எம். நீலேஷ்வர் | பொறியாளர் | பொறியியல் | 01.04.2023 | 19.01.2024 |
| | மாலதி | பொறியாளர் | பொறியியல் | 19.01.2024 | 11.03.2024முப |
| | ஜெ. மாதவன் | பொறியாளர் | பொறியியல் | 11.03.2024பிப | 31.03.2024 |
| பொதுப்பிரிவு | | | | | |
| | பா. பாக்கியலட்சுமி | மேலாளர் (பொ) | | 05.04.2023 | 02.05.2023 |
| 3 | பு.ஸ்ரீபிரகாஷ் | மேலாளர்(பொ) | பொது | 03.05.2023 | 10.05.2023 |
| | ரெ. ரங்கநாயகி | மேலாளர் | பொது | 11.05.2023 | 23.08.2023 |
| | பு.ஸ்ரீபிரகாஷ் | மேலாளர்(பொ) | பொது | 24.08.2023 | 31.03.2024 |
| 4 | கு. அசாகன் | கணக்கர் (பொ) | பொது | 05.04.2023 | 02.05.2024 |
| 4 | பு. ஸ்ரீபிரகாஷ் | கணக்கர் | பொது | 03.05.2023 | 31.03.2024 |
| 5 | பா. பாக்கியலட்சுமி | உதவியாளர் | பொது | 01.04.2023 | 31.03.2024 |
| | கி. ராமசாமி | உதவியாளர் | பொது | 11.01.2023 | 30.04.2023 |
| 5 | கு.அசோகன் | உதவியாளர் | பொது | 01.04.2023 | 21.08.2023 |
| 6 | க. ராஜா | உதவியாளர் | பொது | 01.04.2023 | 31.03.2024 |
| | வே. சாமிநாதன் | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 12.10.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | உதவியாளர் | | 18.11.2023 | 31.03.2024 |
| | T. சரளா | இளநிலை உதவியாளர்<br>உதவியாளர் | பொது | 01.04.2023<br>13.10.2023 | 12.10.2023<br>31.03.2024 |
| | அ. அனிதா | இளநிலை உதவியாளர்<br>உதவியாளர் | பொது | 01.04.2023<br>13.10.2023 | 12.10.2023<br>31.03.2024 |
| | ச. சாமுண்டீஸ்வரி | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 31.03.2024 |
| | செ. பாலமுருகன் | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 31.03.2024 |
| | உமாமகேஷ்வரி | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 27.10.2023 |
| | ஆர். தவக்குமார் | இளநிலை உதவியாளர் | காசாளர் | 01.04.2023<br>11.08.2023 | 15.06.2023<br>30.03.2024 |
| | செ. ரகுராமன் | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 10.08.2023 |
| | ப. சுந்தர் | இளநிலை உதவியாளர் | பொது | 01.03.2023 | 30.06.2023 |
| | ஆர். கலைச்செல்வி | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 31.03.2024 |
| | S. எலிசபெத் ராணி | இளநிலை உதவியாளர் | பொது | 01.01.2023 | 31.03.2024 |
| | தே. சிரஞ்சீவி | இளநிலை உதவியாளர் | பொது | 01.04.2023 | 14.05.2023 |
| | தா. தீபா | இளநிலை உதவியாளர் | பொது | 15.05.2023 | 31.03.2024 |
| | அ. சபரிநாதன் | இளநிலை உதவியாளர் | பொது | 06.11.2023 | 31.03.2024 |
| | கு. பாலகிருஷ்ணன் | இளநிலை உதவியாளர் | பொது | 09.11.2023 | 31.03.2024 |
| | எம். சண்முகம் | இளநிலை உதவியாளர் | பொது | 07.12.2023 | 31.03.2024 |
| | வெ. குருமூர்த்தி | இளநிலை உதவியாளர் | பொது | 01.12.2023 | 31.03.2024 |
| வருவாய் பிரிவு | | | | | |
| | மு. சிவக்குமார் | வருவாய் ஆய்வாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 31.03.2024 |
| | வெ. நாகராஜ் | வருவாய் ஆய்வாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 14.06.2023 |
| | மு. செல்வராணி | வருவாய் ஆய்வாளர் | வருவாய் பிரிவு | 13.10.2023 | 31.03.2024 |
| | எம். சண்முகம் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2024 | 14.06.2023 |
| | டி. ராமதாஸ் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 31.03.2023 |
| | வி.கலைச்செல்வி | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 31.03.2023 |
| | எம். பாரத் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 31.03.2024 |
| | பி. ராகுல் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 31.03.2024 |
| | தா. தீபா | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 14.05.2023 |
| | பி. ரங்கநாதன் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 12.10.2023 |
| | கு. பிரசாந்த் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 13.06.2023 |
| | சி. விஜயகுமார் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 01.04.2023 | 26.05.2023 |
| | து. கோவிந்தராஜன் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 24.04.2023 | 31.03.2024 |
| | நா. சதுர்முகம் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 12.05.2023 | 12.10.2023 |
| | க. சோனியா | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 03.07.2023 | 31.03.2024 |
| | எஸ் தேவி | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 03.07.2023 | 17.11.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ம. பூங்கொடி | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 03.07.2023 | 26.10.2023 |
| | ர. துரைசாமி | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 03.07.2023 | 31.03.2024 |
| | நா. சுகன்ராஜ் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 15.11.2023 | 31.03.2024 |
| | அ. நவீன்குமார் | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 15.11.2023 | 31.03.2024 |
| | ரா. ஷாலினி | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 06.11.2023 | 31.03.2024 |
| | வெ. குருமூர்த்தி | வருவாய் உதவியாளர் | வருவாய் பிரிவு | 001.10.2023 | 31.11.2023 |
| நகரமைப்பு பிரிவு | | | | | |
| | கி. நடராஜன் | நகராமைப்பு அலுவலர் (பொ) | நகரமைப்பு பிரிவு | 01.04.2023 | 15.08.2023 |
| | சாந்தி | நகரமைப்பு அலுவலர் | நகரமைப்பு பிரிவு | 16.08.2023 | 31.10.2023 |
| | கி. நடராஜன் | நகராமைப்பு அலுவலர் (பொ) | நகரமைப்பு பிரிவு | 01.11.2023 | 31.03.2024 |
| | கி. நடராஜன் | நகரமைப்பு ஆய்வாளர் | நகரமைப்பு பிரிவு | 01.04.2023 | 31.03.2024 |
| கணினி பிரிவு | | | | | |
| 35 | ஜி. முருகன் | உதவி கணினி திட்டமிடுநர் | தொழில்நுட்பம் | 01.04.2023 | 31.03.2024 |
| 35 | மு. கோபு | புள்ளி விவரக் குறிப்பாளர் | தொழில்நுட்பம் | 01.04.2023 | 31.03.2024 |

## 5. சாலைகள்

சித்தூர் கடலூர் மற்றும் பாண்டி பெங்களூர் மற்றும் தென் மாவட்டங்கள் போன்ற முக்கிய நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் இந்நகராட்சியுடன் இணைக்கப்பெற்றுள்ளன. மேலும் திருவண்ணாமலை முதல் சென்னை சாலை பிரதான சாலையாக உள்ளது. இதன் நீளம் 182 கிலோ மீட்டர் ஆகும்.

இந்நகரில் 1035 சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் நீளம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலை | 43.74 கி.மீ. |
| 2 | தார் சாலை | 75.849 கி.மீ. |
| 3 | மண் பாதை | 26.652 கி.மீ. |
| | **மொத்தம்** | **156.343 கி.மீ.** |

ஆ. 13.080 கிலோ மீட்டர் தார் சாலை நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்படடு வருகிறது. 6.00 கிலோ மீட்டர் தார்சாலை தேசிய நெடுஞ்சாலை தறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகர எல்லைக்குள் உள்ள மொத்த சாலைகளின் நீளம் 175.423 கிலோ மீட்டர் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>கீழ்க்காணும் இடங்களில் காவல் துறையினரால் போக்குவரத்து சீரமைக்கப்பட்டு வருகிறது.</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | பெரிய தெரு | : | தேரடி தெரு, கொசமடத் தெரு |
| 2 | திருவூடல் தெரு | : | திருமஞ்சன கோபுரத்தெரு |
| 3 | திருவூடல் தெரு | : | தேரடித் தெரு, அசலியம்மன் கோவில் தெரு, சந்திப்பு |
| 4 | அண்ணாசாலை | : | மத்தலாங்குளத் தெரு சந்திப்பு |
| 5 | சின்னகடைத் தெரு | : | மத்தலாங்குளத் தெரு, முத்துவிநாயகர் கோயில் தெரு சந்திப்பு |
| 6 | திருமஞ்சனகோபுரத் தெரு | : | செங்கம் ரோடு சந்திப்பு |
| 7 | திருக்கோவிலூர் ரோடு | : | வேட்டவலம் ரோடு சந்திப்பு |
| 8 | பைபாஸ் ரோடு | : | வேட்டவலம் ரோடு சந்திப்பு |
| 9 | செங்கம் சாலை | : | காமராஜர் சிலை அருகில் |
| 10 | சின்னகடைத் தெரு | : | பேருந்து நிலையம் எதிரில் |

## <u>6. தேசிய நகர்ப்புற வாழ்வதார இயக்கம் – 2023 – 2024</u>

சொர்ணஜெயந்தி சகரி ரோஜ்கார் யோஜனா திட்டம் முடிவடைந்து, 2023-2024 ஆம் ஆண்டின் முதல் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) என்ற மத்திய, மாநில அரசின் புதிய திட்டம் செயல்பாட்டிற்கு வரப்பட்டுள்ளது.

அவ்வியக்கத்தின் வழிகாட்டுதலின்படி சுயஉதவிக் குழுக்களை அமைத்து பகுதி வாரிய சுயஉதவிக் குழுக்களின் ஒருங்கிணைப்பு (ALF) நகர அளவிலான சுயஉதவிக் குழுக்களின் ஒருங்கிணைப்பு (CLF) அமைக்கப்பட்டுவருகிறது.

NULM இயக்கம் கீழ் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

1. Social Mobilization & Institutional Development (SMID) – மகளிர் திட்டம் மாறுதல்
2. Self Employment Proframme (SEP) - மகளிர் திட்டம் மாறுதல்
3. Capacity Building & Training (CBT) - மகளிர் திட்டம் மாறுதல்
4. Shelter for Urban Horneless (SUH) - நகராட்சி வசம் உள்ளது
5. Scheme for Urban Street Vendors (SUSV) - நகராட்சி வசம் உள்ளது
6. Adiministration & office Expenses (A&OE) - மகளிர் திட்டம் மாறுதல்
7. Information, Education & Commenication (IEU)

## 7. பயணியர் விடுதி

இந்நகராட்சிக்கு சொந்தமான பயணியர் விடுதிகள் இல்லை பாண்டி-பெங்களூர் நெடுஞ்சாலையில் செங்கம் ரோடு ரமணாஸ்ரமம் அருகில் பொதுப்பணி துறையினரால் ஆறு அறைகள் கொண்ட பயணியர் விடுதியும் மற்றும் அண்ணாசாலையில் நெடுஞ்சாலைத்துறை பயனியர் விடுதி வேட்டவலம்-விழுப்புரம் சாலையில் 6 அறைகள் கொண்ட பயணிகள் விடுதி பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 8. தெருவிளக்கு வசதி (2023 – 2024)

இந்நகராட்சியில் 2023-2024 ஆம் ஆண்டில் தெருவிளக்குகள் நகராட்சியின் மூலம் சென்னை என்ற தனியார் நிறுவனம் மூலம பராமரிக்கப்படுகிறது. இதற்காக சுமார் ரூ.50.00இலட்சம் செலவு செய்யப்பட்டது. தெருவிளக்கு பராமரிப்பில் மின் கட்டணம் சுமார் ரூ.2.00 கோடி செலவு செய்யப்பட்டது.

**தெரு விளக்குகள் விவரம் :-**

| வ.எண். | விளக்குகள் விவரம் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 40w குழல் விளக்குகள் | : | 3051 எண்ணிக்கை |
| 2 | 250w சோடியம் ஆவி விளக்குகள் (SVL) | : | 1371 எண்ணிக்கை |
| 3 | 150w சோடியம் ஆவி விளக்குகள் (SVL) | : | 109 எண்ணிக்கை |
| 4 | 70w சோடியம் ஆவி விளக்குகள் (SVL) | : | 37 எண்ணிக்கை |
| 5 | 70w LED விளக்குகள் | : | 40 எண்ணிக்கை |
| 6 | 120w LED விளக்குகள் | : | 78 எண்ணிக்கை |
| 7 | 150w LED விளக்குகள் | : | 222 எண்ணிக்கை |
| 8 | 150w LED விளக்குகள் (சென்டர் மீடியன்) | : | 223 எண்ணிக்கை |
| 9 | 100w LED விளக்குகள் | : | 34 எண்ணிக்கை |
| 10 | 250w LED விளக்குகள் | : | 28 எண்ணிக்கை |
| 11 | 400w உயர்மின் கோபுர விளக்குகள் (HML) | : | 356 எண்ணிக்கை |
| 12 | 150w உயர்மின் கோபுர விளக்குகள் (LED) | : | 48 எண்ணிக்கை |
| 13 | 1x36 காம்பேக்ட் புளோரோசென்ட் விளக்குகள் (CFL) | : | 180 எண்ணிக்கை |
| 14 | 4x36 காம்பேக்ட் புளோரோசென்ட் விளக்குகள் (CFL) | : | 530 எண்ணிக்கை |
| 15 | 36w LED விளக்குகள் | : | 106 எண்ணிக்கை |
| | மொத்த விளக்குகள் | | 6413 எண்ணிக்கை |

## 9. கல்வி

அரசாணை எண்.702 கல்வித்துறை நாள் 23.05.1986ல் நகராட்சி கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் முழு நிர்வாகப் பொறுப்புகளை 01.04.1990 முதல் அரசு கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களின் பராமரிப்பு பணிகளை மட்டும் நகராட்சி செய்து வருகிறது. இவ்வகையில் அறிக்கையாண்டில் ரூ.3400000/- செலவிடப்பட்டது. இந்நகராட்சியின் பராமரிப்பில் 15 எண்ணிக்கை ஆரம்ப பள்ளியும் 2 எண்ணிக்கை நடுநிலைப் பள்ளி 2 எண்ணிக்கை உயர்நிலைப் பள்ளியும் 2 எண்ணிக்கை மேநிலைப் பள்ளியையும் ஆக 21 பள்ளிகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 10. பொது நூல் நிலையங்கள்

இந்நகரில் மாவட்ட நூலக ஆணைய குழுவினரால் கிளை நூல் நிலையம் ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. நூலக வரி மூலம் அறிக்கையாண்டில் நூலக ஆணைக்குழுவிற்கு ரூ. 907062/- நூலக வரி செலுத்தப்பட்டது. தினசரி செய்தித் தாள் மட்டும் வாங்கி விநியோகம் செய்யப்படுகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் KNMT 2021 – 2022 திட்டத்தின் கீழ் ரூ. 199.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கப்பட்டு 2600 எண்ணிகையில் புத்தகங்கள் பொதுமக்கள், மாண மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது.

## 11. பள்ளி சத்துணவு மையங்கள்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் 18.09.1982ல் அமல்படுத்தப்பட்டது. இந்நகராட்சியில் 04.07.2001 முதல் அய்யங்குளத் தெரு பள்ளி, கோபால் பிள்ளையார் கோவில் தெரு பள்ளியுடன் இணைக்கப்பட்டு விட்டது. 07.06.2002 முதல் கோபால் பிள்ளையார் கோவில் தெரு நகராட்சி ஆரம்பப்பள்ளி வருகை குறைவினால் மூடப்பட்டு விட்டது. எனவே அறிக்கையாண்டில் 14

ஆரம்பப் பள்ளிகள் மட்டும் இயங்கி வருகிறது. 3 நடுநிலைப் பள்ளியிலும் 2 உயர்நிலைப் பள்ளிகளிலும் 2 மேல் நிலைப் பள்ளிகளிலும் செயல்பட்டு வருகிறது. 5 வயது முதல் 9 வயது வரை மற்றும் 10 வயது முதல் 14 வயது வரையில் உள்ள அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தினசரி 3460 மாணவ மாணவியர்கள் பயனடைந்து வருகின்றனர். ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் 1 பள்ளி சத்துணவு அமைப்பளர் 1 சமையலர் மற்றும் 1 சமையல் உதவியாளரும் பணிபுரிந்து வருகின்றனர். அக்டோபர் 2017 முதல் 7th Pay Commission G.O.Ms.No.303 Finance Department சம்பள உயர்வு செய்யப்பட்டு அமைப்பாளருக்கு 7100 – 20200 சமையலர் 4100 – 12500 மற்றும் சமையலர் உதவியாளருக்கு 3000 - 9000 வழங்கப்பட்டு வருகிறது.

மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் அனைத்து மாணவ மாணவியருக்கும் (10 வயது முதல் 14 வயது வரை) 15.09.2014 முதல் பள்ளி வேலை நாட்களிலும் மட்டும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் மேல்நிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் 500 மாணவிகளுக்கு மேல் சத்துணவு வழங்கப்படுவதால் அப்பள்ளியில் 2 சமையலரும், 2 சமையல் உதவியாளரும் பணியாற்றி வருகின்றனர். பள்ளி சத்துணவு மைய பணிகளுக்கு ஒரு உதவியாளர் மற்றும் கணக்கர் பணிபுரிந்து வருகிறார். இத்திட்டத்திற்கு 2023-2024 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிட்டவாறு அரசு மான்றம் பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

1. தொடர் மான்யம் வரவு - ரூ. 23.60 லட்சம்

2. செலவு - ரூ. 23.60 லட்சம்

**12 .** அரசாணை (நிலை) 43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை (சந4-1) துறை, நாள் 27.07.2022ன் ஆணையின்படி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 16.09.2022 முதல் தொடங்கப்பட்டு, 14 தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 877 மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஜெயம் மகளிர் சுய உதவிக்குழு இந்நகராட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சமையற் கூடத்திலிருந்து சமைக்கப்பட்ட உணவுகள் ஒரு வாகனத்தின் வாயிலாக, பள்ளிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு வழங்கப்படுகிறது.

## 13 . பொது சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகள்

### கருவிகளும், தளவாடங்களும்

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவிக்கு தளவாட பொருட்கள் மற்றும் மருந்துகள் வாங்கிட ரூ.11844031/- செலவிடப்பட்டுள்ளது.

இந்நகரில் அரசு பொது மருத்துவமனை ஒன்றும், அரசு தொழு நோய் மருத்துவமனை ஒன்றும், அரசு மார்பு மருத்துவமனை ஒன்றும் உள்ளது. நகராட்சியில் சித்த மருத்துவமனை இரண்டும், நகர ஆரம்ப சுகாதார நிலையம் மூன்று நிலையங்கள் இயங்கி வருகிறது.

## 14. நகராட்சி மருத்துவப் பணி

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் அரசாணை நிலை எண். 764, நாள் 31.03.1988 ன்படி இந்நகராட்சியில் 30.09.1993 வரை திட்டம்செயல்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் 1046 எண்ணுள்ள 23.07.1993 ல் தேசிய அரசாணையில் மேற்படி திட்டம் 5வது இந்திய மக்கள் தொகை திட்டம் என விரிவுப்படுத்தப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் (குடும்ப நலம்) இரு நகர நல வாழ்வு மையங்கள் உருவாக்கப்பட்டு கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படியான பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர்கள் (பெண்) | : | 3 (DDHS) |
| 2 | செவிலியர்கள் | : | 9 |
| 3 | வகுப்பு – IV (Women) | : | 1 |
| 4 | சுகாதார ஆய்வாளர் | : | 3 |

கீழ்க்காணும் மூன்று நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் இடங்களில் நகர நல மையங்கள் செயல்பட்டு வருகிறது.

1. திருவண்ணாமலை மத்திய ஆரம்ப சுகாதார நிலையம் (இரயில்வே கேட் அருகில்)
2. கீழ்நாத்தூர் செல்லநேரித் தெரு - திருவண்ணாமலை
3. அண்ணாநகர் ஆரம்ப சுகாதார நிலையம், சமுத்திரம் காலணி மேலும், மேற்படி மையங்களில் 24X7 பிரசவம் நிலையங்களாக இயங்கி வருகிறது.

G.O.(MS) No. Health and family Welfare (EAP11-1) Department அரசாணை எண்.299 நாள் 16.12.2016 ன்படி இந்நகராட்சியின் மேற்கண்ட மூன்று ஆரம்ப சுகாதார நிலையம் NUHM திட்டத்தின் துணை இயக்குநர் பொது சுகாதாரம் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன்படி மூன்று மருத்துவ அலுவலர்கள் 9 நகர செவிலியர் மற்றும் 3 மருந்தாளுநர்கள், மேலும் மூன்று எண்ணிக்கை Lab Technician ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

| கிழமை | காலை | மாலை |
|---|---|---|
| திங்கட்கிழமை | புறநோயாளிப் பணி | வீடுவீடாக சென்று பகுதியினை பார்வையிடுதல் |
| செவ்வாய் கிழமை | புறநோயாளிப் பணி | கர்ப்பிணி தாய்மார்களுக்கு பரிசோதனை |
| புதன் கிழமை | புறநோயாளிப்பணி | தடுப்பூசி திட்டப் பணி |
| வியாழக்கிழமை | புறநோயாளிப்பணி | புறநோயாளிப் பணி |
| வெள்ளிக் கிழமை | புறநோயாளிப் பணி | 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்களுக்கு பரிசோதனை பணி |
| சனிக்கிழமை | புறநோயாளிப்பணி | வார ஆய்வுக்கூட்டம் |

அவ்வப்போது அரசினால் அறிவிக்கப்படுகின்ற அனைத்த நலத்திட்டங்களும் இத்திட்ட பணியாளர்களால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## குடும்ப நலம்

2023 – 2024 ஆண்டு இந்நகராட்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் மற்றும் தணை இயக்குநர் மருத்துவப் பணிகள் (குடும்ப நலம்) திருவண்ணாமலை நிர்ணயிக்கப்பட்ட இலக்கு சாதனை விவரம்

| வ.எண் | குடும்பநல திட்ட முறைகள் | பயனீட்டாளர்கள் |
|---|---|---|
| 1. | அறுவை சிகிச்சை | - |
| 2. | கருத்தடை வளையம் | 299 |
| 3. | வாய்வழி மாத்திரை | 214 |
| 4. | ஆணுரைகள் | 3265 |

## நோய் தடுப்புத் திட்டம்

தேசிய தடுப்பூசி திட்டத்தின்படி, ஒவ்வொரு மாதமும், புதன் கிழமை அன்று ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை தோறும் கர்ப்பிணி தாய்மார்களுக்கான பரிசோதனை மற்றும் இரண ஜன்னி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கீடு மற்றும் சாதனை விவரம் கீழ்வருமாறு (2022-2023)

| வ.எண் | குழந்தைகள் நல திட்ட முறைகள் | இலக்கீடு | அடைந்த சாதனை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பிசிஜி | 1830 | 1705 | 93% |
| 2. | Pentavlent & Polio e40pw | 1830 | 1706 | 93% |
| 3. | தட்டம்மை | 1830 | 1689 | 92% |
| 4. | இரண ஜன்னி | 1988 | 1808 | 90% |

## மான்ய விவரம்

இந்நகராட்சி 5வது இந்திய மக்கள் தொகைத் திட்டத்திற்கு (குடும்ப நலம்) 2023-2024 ஆம் ஆண்டுக்கு மான்யம் ரூ.6097994/- உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், நகரநல மையங்களுக்கு தேவையான மருந்துகளுக்கான மான்யத்தினை குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை அவர்களால் வழங்கப்பட்டு தமிநாடு அரசு மருந்து கட்டுப்பாடு நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

## 15. பொதுசுகாதாரமும் , பணியாளர்களும்

1. நகரநல அலுவலர் - 1

2. சுகாதார அலுவலர் - 1

2. துப்புரவு ஆய்வாளர்கள் - 3

3. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் - 10

4. களப்பணியாளர் - 1

5. துப்புரவு பணியாளர்கள் - 57

அறிக்கையாண்டில் 3துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருந்தது. அறிக்கையாண்டில் பொது சுகாதார பணி சிறந்த முறையில் கவனிக்கப்பட்டது.

## 16. பிறப்பு

1. அறிக்கையாண்டில் 1075 பிறப்புகள் பதிவாகி உள்ளது. இது சென்ற ஆண்டு 1281 ஆக இருந்தது.

## தொற்று நோய்கள்

1. காலாரா, பிளேக், மலேரியா போன்ற நோய்களின் அபாயம் இல்லை.
2. டெங்கு ஒழிப்பு பணிக்காக 120 கொசுக் குழு ஆய்வர்கள் நியமிக்கப்பட்டு (300 வீடுகளுக்கு ஒருவர்) தினசரி கொசுக்குழு ஒழிப்புப் பணி நடைபெற்று வருகிறது. மேலும் ஒரு களப்பணி உதவியாளர் 6 கொசு புகை மருந்து அடிப்பவர்கள் கொண்டு இப்பணி நடைபெற்று வருகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவின்படி அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 6 சுற்று நிலவேம்பு கசாயம் (ஒரு சுற்று -5 தொடர் நாள்) மேலும் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் டெங்கு பாதித்த வார்டுகளில் வீடு தோறும் கசாயம் கொடுக்கப்பட்டுள்ளது.
3. 110 விதியின் 14ன் கீழ் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் மொத்தம் 17 பள்ளிகளில் 23 நபர்களை கொண்டு ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு ரூ. 10320 வீதம் தொகை வழங்கப்பட்டு கழிப்பிடங்களில் துப்புரவு பணி ஆண்டுக்கு தோராய செலவு ரூ. 2895792/- ஆகும்

## யானைக்கால் நோய் தடுப்பு:

தேசிய யானைக்கால் நோய் தடுப்பு சட்டத்தின் கீ தடப்பு நடவடிக்கை அரசு துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வருகிறது. ஒரு பகுதியில் நகராட்சி யானைக்கால் நோய் ஒழிப்பு பிரிவு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சியில் ஒரு துப்புரவு ஆய்வாளர், ஒரு துப்புரவு மேற்பார்வையாளர், 10 கொசு மருந்து அடிப்பவர்கள் ஆகியவர்களை இப்பணியில் ஈடுபடுத்தி

நகரிலுள்ள கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யப்பட்டு கொசு உற்பத்தி தடுக்கப்பட்டு வருகிறது. இரவு நேரங்களில் புகை மருந்து அடிக்கப்படும் கொசு ஒழிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது. கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக அறிக்கை ஆண்டில் ரூ.100000/- செலவு செய்யப்பட்டது. அறிக்கையாண்டில் மான்யத் தொகை ஏதும் வரப்பெறவில்லை

## 17. பொது சுகாதாரப் பணிகள் :

இந்நகராட்சியில் வார்டு எண். 01 முதல் 39 வார்டுகளில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்கள் கொண்டும் 24 தள்ளு வண்டிகள் மூலமும், வார்டுகளில் வீடு வீடாக குப்பை சேகரித்தல், பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது 60 எண்ணிக்கையில் பேட்டரி வாகனங்கள் மற்றும் 12 எண்ணிக்கையில் இலகு இரக வாகனங்கள் வாங்கப்பட்டு முதல்நிலை குப்பை சேகரிப்புகள் என பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது கொரோனா வைரஸ் தொற்று தமிழகத்தில் ஆரம்பம் ஆன சூழலில் அதன் முன்னெச்சரிக்கைகளாக சுபசுரக்குடிநீர் பவுடர் வாங்கப்பட்டு வருகிறது. சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்தச் செல்லுதல் உள்ளிட்ட பணிகள் அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி பணியாளர்களை கொண்டு தெரு பெருக்குதல் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்தல் பணி செய்யும் நகராட்சியின் 3 டிப்பர் லாரிகள் மற்றும் 4 காம்பாக்டர் லாரிகளைக் கொண்டு குப்பை அகற்றும் பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும் நகர் எங்கும் உள்ள குப்பைகளை சேகரித்திட 115 காம்பாக்டர் தொட்டி (Bin) வைக்கப்பட்டு, தொட்டிகள் டம்பர் பிளேசர் வாயிலாக அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது. நகரில் உள்ள அனைத்து வீடுகளிலும் வீடு வீடாக ன்று திடக்கழிவுகளை தரம் பிரித்து பெற 254 பணியாளர்களை கொண்டு ( LD Man Power) பெறப்பட்ட மக்கும் தன்மையுள்ள கழிவுளை நுண் உர மையத்திற்கு அனுப்பப்பட்டு செயலாக்கம் செய்யப்படுகிறது. மக்காத கழிவுகளை வளமீட்பு மையத்திற்கு அனுப்பி வாகனம் மூலம் அரியலூார் சிமெண்ட தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது.

| | |
|---|---|
| நகரில் உள்ள மொத்த வீடுகள் | - 34380 |
| கழிப்பிடங்கள் உள்ள வீடுகள் | - 27544 |

## அ. அபாயமும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்:

1. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் நடைபெறும் இடங்களை ஆய்வு செய்து 2320 இடங்கள் பதிவு செய்யப்பட்டது.
2. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் நடத்த நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு தனியாக கட்டணம் வசூலிக்கப்படும் அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டது.
3. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் நடத்த உபவிதிகள் நடத்த உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. நகரில் கடைகளை மற்றும் தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கி சுகாதார முறையில் நடத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## நவீன ஆட்டிறைச்சிக் கூடம்

ரூ. 23.00 இலட்சம் செலவில் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் கட்டப்பட்டு நாள்தோறும் கால்நடை மருத்துவர் ஆய்விற்கு பின் ஆடுகள் வெட்டப்பட்டு, நகராட்சி முத்திரை பெற்றபின் பொது மக்களுக்கு விநியோகத்திற்கு இறைச்சிகள் அனுமதிக்கப் படுகின்றன. மேலும் இறைச்சிகள் சுகாதாரப் பிரிவு மூலம் கண்காணிக்கப்பட்டு வந்தது. தற்போது பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

## நவீன் எரிவாயு தகனமேடை:

